**செய்தி குறிப்பு எண்.175** **நாள். 20.12.2007**

## தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் பக்ரீத் பெருநாள் வாழ்த்துச் செய்தி

தியாகத் திருநாள் எனும் பக்ரீத் பெருநாள் இஸ்லாமிய சமுதாய மக்களால் இன்று (21.12.2007) நாடெங்கும் மிகுந்த மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படுகிறது.

தனது வீட்டின் சமையல் அறையில் இருந்து வெளியேறும் வாசனையால் வசதியற்ற தனது அண்டை வீட்டாருக்கு இடையூறு ஏற்பட்டு விடக்கூடாது என்ற சிந்தனையைக் கொண்ட மனித நேயமிக்கது இஸ்லாமியக் கலாச்சாரம். இந்தக் கலாச்சாரத்தைத் தோற்றுவித்த நபிகள்நாயகம் அவர்கள், ‘உண்மையான முஸ்லீம் தனது சகோதரர்களையும், நண்பர்களையும் நேசிப்பார்; அவர்களுக்கு நன்மையை மட்டுமே நாடுவார்; அவர்கள் இருந்தாலும், இல்லையென்றாலும் அவர்களது கௌரவத்தையும் செல்வங்களையும் பாதுகாப்பார்; அவர்களது குறைகளை மறந்து மன்னித்துவிடுவார்; தனது நாக்கு, கரங்கள், பிற உறுப்புகள் என அனைத்திலும் பரிசுத்தமானவராக, வாரி வழங்கும் வள்ளலாக, பொய் பேசாத உண்மையாளராக, கடுமை காட்டாத மென்மையானவராக, தூய மனதுடையவராகத் திகழ்வார்’ என்று குறிப்பிடுகிறார்கள்.

அண்ணல் நபிகள் பெருமான் வகுத்துத் தந்த இத்தகைய அருமையான மனித நேயப் பண்புகளைப் பின்பற்றிடும் சிறுபான்மைச் சமுதாய இஸ்லாமிய மக்கள் தமிழகத்தில் மகிழ்ச்சியுடன் வாழ அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு சலுகைகளுடன் இவ்வாண்டில் அரசுப் பணிகளிலும், கல்வி நிறுவனங்களிலும் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி அரவணைத்திடும் தமிழக அரசின் சார்பில் என் உளமார்ந்த பக்ரீத் திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.